**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.. 128/2015 தேதி- 14.08.2025

(P.W.1) . ஜார்ஜ்செல்வமணி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் ஆணையர் வரும்போது உடன் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் வழக்கு பி பட்டிகை சொத்தில் உள்ளடங்கிய 1 சென்ட் சொத்தின் எல்லை கற்களை வைத்து அளந்தாரா என்றால் அளந்தார். ரீசர்வே பிளாணை ஆணையர் வரைபடத்தில் காட்டியுள்ளாரா என்றால் காட்டியுள்ளார். எனது பிராதில் வழக்கு பி பட்டிகை சொத்தில் 437 சதுர அடி என கூறியுள்ளேன். 437 சதுரஅடி எங்கிருந்து எங்குவரை என்று அளந்து நீதிமன்ற ஆணையர் வரைபடம் தயார் செய்தாரா என்றால் வரைபடம் தயார் செய்தார். பி பட்டிகை சொத்து என நான் கூறுவது பிரதிவாதியின் பூர்வீக சொத்திற்கு வடக்கு பக்கம் என்றால் சரிதான். பிரதிவாதி அவருடைய பூர்வீக சொத்தின் வடக்கு பக்கம் ரோட்டை தொடுவதற்கு ஒருகேட் அமைத்துள்ளார் என்றால் சரிதான்.

என்னிடம் காண்பிக்கப்படும் என்னுடைய பிராதில் பி பட்டிகை சொத்து 250 சதுரலிங்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1000 சதுரலிங்ஸ் என்றால் 1 சென்ட் . 250 சதுரலிங்ஸ் என்றால் 1/4 சென்ட் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பி பட்டிகை சொத்தை எனக்கு முன்பாகத்தான் அளந்து திட்டப்படுத்தி வரைபடம் மற்றும் அறிக்கை தயார் செய்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் பார்த்துள்ளேன். பி பட்டிகை சொத்தில் பிரதிவாதியின் பூர்வீக சொத்து உட்படுமா என்றால் உட்படாது. எ பட்டிகை சொத்து என்பது பிரதிவாதியின் பூர்வீக சொத்திலிருந்து எனக்கு கிரையம் கொடுத்த 5 சென்ட் என்றால் சரிதான்.

ஆணையர் அவரது பின்குறிப்பில் செவ்வகமாக கருப்பு நிறத்தில் காண்பித்து அதை கேட் என குறிப்பிட்டிருக்கிறார் என்றால் சரிதான். ஆணையர் வரைபடத்தில் நீலநிறமாக காண்பித்திருப்பது வழக்கு எ பட்டிகை சொத்து என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தை சிவப்பு நிறத்தில் காண்பித்துள்ளார் என்றால் சரிதான். ஆணையருடைய வரைபடத்தில் வழக்கு பி பட்டிகை சொத்து பிரதிவாதியின் பூர்வீக சொத்திலும் வருகிறது என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தின் விஸ்தீரணம்

500 சதுரலிங்ஸ் என நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டிருக்கிறார் என்றால் சரிதான். ஆனால் எனது பிராதுபடி பி பட்டிகை சொத்து 250 சதுரலிங்ஸ் என்றால் நீதிமன்ற ஆணையர் கூறியிருக்கும் 500 சதுரலிங்ஸ் என்பதுதான் சரியான அளவு.

பூர்வீக சொத்திலிருந்து எவ்வளவு பரப்பு, அவர் விலைக்கு வாங்கிய சொத்திலிருந்து எவ்வளவு பரப்பு என குறிப்பிட்டு நீதிமன்ற ஆணையர் கூறியிருக்கிறார். விஸ்தீரணம் எவ்வளவு என்று குறிப்பிடவில்லை என்றால் அளவு குறிப்பிட்டுள்ளார். எ பட்டிகை சொத்தின் கிழக்கு ஓரத்தில் 10 அடிக்கும் மேல் ஒரு காம்போண்ட் சுவர் இருக்கிறது. பிரதிவாதி அவரது சொத்தின் உள்பகுதியில் மேற்கு அற்றத்தை தொட்டு என்னுடைய கிழக்கு அற்றத்தில் காம்போண்ட் சுவருக்கு உள்ளே ஒரு நீளமான அறை இருக்கிறது என்றால் சரியல்ல. காம்போண்ட் சுவர் இருக்கும் பகுதியில் எந்த அறையும் இல்லை.

எனது எ பட்டிகை சொத்தின் தெற்கு பக்கம் பிரதிவாதியின் சொத்தில் வடக்குவரை ஒரு அறை கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதில் டைல்ஸ் கற்கள் அடுக்கி வைத்திருந்தார் என்றால் முன்பு இருந்தது தற்போது இல்லை. தற்போதும் 50 லட்சத்திற்கு மேல் மதிப்பீடு செய்யக்கூடிய அளவிற்கு அதில் இருக்கிறது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மேற்கு ஓரத்தில் என் வீட்டின் தெற்கு பக்கம் அறைகள் கட்டியுள்ளார் என்றால் சரிதான். அவர் டைல்ஸ் வியாபாரம் சிறப்பாக நடத்தி வந்தார் தற்போது இல்லை. மார்பிள்ஸ் கற்கள் தொழில் செய்து வந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

டைல்ஸ் கற்கள் வந்து இறங்குவதற்கு கனரக வாகனம் வந்து செல்வதுண்டு என்றால் தற்போது வருவதில்லை. கனரக வாகனங்கள் உள்ளே வரவேண்டுமென்றால் மேற்படி 1 சென்ட் சொத்தில் வந்துதான் கனரக வாகனம் உள்ளே செல்லமுடியும் என்றால் சரிதான். அவ்வாறு அவருக்கு வாகனம் உள்ளே வரவிடாமல் தடுத்து பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு இடையூறு விளைவிக்கவேண்டி அதில் கார் நிறுத்தி பிரச்சனை ஏற்படுத்தினேன் வழக்கு நிலுவையில் இருக்கும் போது வழியை அடைக்கக்கூடாது என்று காரை நிறுத்தி பிரதிவாதி வழிப்பாதையை அடைக்காமல் இருக்க ஏற்பாடு செய்தேன். இதுசம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து போலிசார் விசாரணை நடத்தினார்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் இந்த வழக்கு முடியும்வரை எந்த இடையூறும் செய்யக்கூடாது என கூறியதால் நான் அங்கு தற்போது காரை

நிறுத்துவதில்லை.

எ பட்டிகை சொத்தை எனக்கு விலை கொடுத்த ஆவணத்திலும் பி பட்டிகை சொத்திலும் 1 சென்ட் சொத்து விலைக்கு வாங்கின ஆவணத்திலும் நான் பணம் கொடுத்ததாக எந்த விபரமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி 1 சென்ட் சொத்தில் எனக்கு போக்குவரத்துக்காக மட்டும் என எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் போக்குவரத்துக்கு மட்டும் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. நான் பிரதிவாதியின் தொழிலை இடையூறு செய்வதற்காக காரை நிறுத்தி பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. கனரக வாகனம் உள்ளே வர முடியாத காரணத்தால் பிரதிவாதி அவரது தொழிலை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் அவருக்கு பலலட்சங்கள் நஷ்டம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேலும் 50 லட்சத்திற்கு மேலாக உள்ளே இருக்கும் டைல்ஸ் கற்களை எடுக்கமுடியாத நிலையில் இருக்கிறது என்றால் சரியல்ல.

இந்த வழக்கு தாக்கல் செய்த பின்புதான் வழிப்பாதையை அடைத்து பிரச்சனை ஏற்படுத்தினார். (சாட்சி தற்போது கீழ்கண்டவாறு கூறினார்) இந்த வழக்கு தாக்கல் செய்த பின்புதான் பாதையை அடைத்தார் என்றால் சரியல்ல. 02.06.2015 அன்று பிரதிவாதி வழிப்பாதையை அடைத்து பிரச்சனை செய்தார். அது சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 5ல் என்னுடைய சொத்தின் எல்கையிலிருந்து 2, 3 அடி முன்பாக நீண்டிருக்கிறது என்றால் சரியல்ல. மேற்படி சொன்ன வா.சா.ஆ.5 ஆவணத்தில் இருக்கும் பில்லர் சுமார் எவ்வளவு ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது

என்றால் சரியாக ஞாபகமில்லை 2001 ஆம் ஆண்டு என நினைக்கிறேன்.

பில்லர் எனது சொத்தின் கிழக்கு வடக்கு எல்கையில் இருக்கிறது என்றால் சரிதான். கிழக்கு பக்கம் இருக்கும் காம்போண்ட் சுவர் வழியாக நான் உள்ளே செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அங்கு செல்வதற்கு எந்த அவசியமும் இல்லை எந்த உரிமையும் தரப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக எனது சொத்தின் கிழக்கு பக்கம் வழியிருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கார் மற்றும் எனது வாகனம் செல்வதற்காக நடை பாதைக்கு மட்டும் கொடுத்த சொத்தை நீட்டி பெரிய பாதையாக மாற்றுவதற்காக போடப்பட்ட பொய் வழக்கு அதில் நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் வா.சா.ஆ. 5 படியே எனக்கு வழிப்பாதை இல்லாதது தெளிவாகிறது என்றால் சரியல்ல. நான் ஆணையரிடம் உண்மையை மறைத்து ஆணையரை கைவசப்படுத்தி பொய்யாக வரைபடம் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ஆணையருடைய அறிக்கை மற்றும் வரைபடம் தவறானது என்றால் அதை ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு நான் கேட் அமைப்பதற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு பிரதிவாதியின் சொத்தில் ஒரு ஆள் போய் வரக்கூடிய உரிமை மட்டும்தான் உள்ளது என்றால் சரியல்ல.

ஒருஆள் போய்வருவதற்கு 2 1/2 அடி போதும் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ய எந்த உரிமை மூலமும் இல்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி

செய்யவேண்டுமென்றாலும் சரியல்ல. 02.06.2015 அன்று பொய்யாக ஒரு வழக்கு மூலம் ஏற்படுத்துவதற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. அதனால் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.